**செ. கு. எண்**: 401 **நாள்**:08.11.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 8.11.2012

சேலம் மாநகர காவல் கட்டுப்பாட்டு அறையில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. N.கணேசன் அவர்கள் 5.11.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டி காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.கணபதி அவர்கள் 5.11.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகா காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. முனியசாமி அவர்கள் 6.11.2012 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை தலைமைக் காவலர்கள் திரு. கணேசன், திரு. முனியசாமி, மற்றும் முதல் நிலைக் காவலர் திரு. கணபதி ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான தலைமைக் காவலர் திரு. கணேசன், முதல் நிலைக் காவலர் திரு. கணபதி மற்றும் சாலை விபத்தில் உயிரிழந்த தலைமைக் காவலர் திரு. முனியசாமி ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**